இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம் - 2006
இறுதிப் பரீட்சை 2006 - மட்டம் 05
LWU3314 – சுற்றாடல் சட்டம்
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

043

திகதி: 21.04.2006 நேரம்: பி.ப 1.30 - பி.ப 4.30

ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான வினைத்திறன் மிக்க பொறிமுறைகள் என்ற வகையில் பின்வரும் கருத்தேற்புகளை நீதிமுறை தீர்ப்புகள் எவ்வாறு அபிவிருத்தி செய்துள்ளன என்பதை விளக்குக.

   (அ) பொது நம்பிக்கை கோட்பாடு(The Public Trust Doctorine)

   (ஆ) தலைமுறைகளுக்கிடையிலான ஒப்புரவு(Inter-generational Equity)

2. அம்பாறை நகரத்தை அண்மித்த பிரதேசம் ஒன்றில் அரசாங்க கைத்தொழில் நிறுவனம் ஒன்று உரவகைகள் மற்றும் கிருமி நாசினிகள் உட்பட்ட விவசாய இரசாயன பொருட்களை தயாரித்து வருகின்றது. குறிப்பாக சிறுவர்கள் உட்பட ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையான மக்கள் சுவாசம் மற்றும சிறுநீரக கோளாறுகள் காரணமாக அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்தது. குறிப்பிட்ட பிரதேசத்தில் சூழல் மற்றும் நீர் வளங்களில் விஷப்பொருட்கள் கலந்தமை இதற்கு காரணமாகும் . தமது வயற் பிரதேசங்கள் மாசுற்றதன் காரணமாக தொடர்ந்தும் விவசாயத்தை மேற்கொள்ள இயலாத நிலையில் அங்கு இருந்த மக்கள் தமது பண்ணைகளை கைவிட்டு அப்பிரதேசத்தை விட்டு அகன்று செல்ல ஆரம்பித்தனர்.

   கொழும்பிலே இருக்கும் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று இந்த விடயத்தை எடுத்து, உயர்நீதிமன்றத்திலே அடிப்படை உரிமைகள் வழக்கொன்றை தாக்கல் செய்ய தீர்மானித்தது. அவர்கள்;

   (அ) இவ் விடயத்தில் தொடர்புபட்டுள்ள நடபடிரீதியான விடயங்கள் மற்றும்

   (ஆ) தமது விண்ணப்பத்தின் பொருளடக்கம் ஆகியன தொடர்பில் உமது ஆலோசனையை நாடுகின்றனர்.

   இந்நிறுவனத்துக்கு ஆலோசனை வழங்குக.

3. சட்டவாக்கம், மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளில் இருந்து எடுத்துக்காட்டுகளை குறிப்பிடுவதன் மூலமாக நிலையாதார அபிவிருத்திக்கான இலங்கையின் சட்ட மறுமொழிகளை நுணித்து பகுப்பாய்வு செய்க.

4. பரிசாலேசியா, சியம்பு என்ற தலைநகரை கொண்ட அரசு ஒன்றாகும். பிரஜைகள் சிலரை அடங்கிய குழுவொன்று, நகரம் பூராவும் குப்பைகளை குவிப்பதனால் அது வசிப்பிடங்களுக்கு பொது தொல்லை ஒன்றை ஏற்படுத்துகிறது என சார்த்தி சியம்பு மாநகரசபைக்கு எதிராக வழக்கு ஒன்றை தொடர்ந்தது. இவ வழக்கை

விசாரித்த நீதிமன்றம், குப்பைகளை குவிப்பதை நிறுத்துமாறும் குப்பைகளை அழிப்பதற்கு மாற்று வழி முறையொன்று கண்டு பிடிக்குமாறும் கட்டளையிட்டு தடையாணை ஒன்றை மாநகரசபைக்கு எதிராக வழங்கியது.

குப்பைகளை அழிப்பதறகுரிய எந்தவொரு வழிவகையும் காணப்படாத காரணத்தினால் தற்போது மாநகரசபை நிலத்திலே குவித்து இருக்கின்ற குப்பைகளை சேகரிப்பதை நிறுத்தியது. மேலே குறிப்பிட்ட அதே பிரஜைகளை அடங்கிய குழு, சுற்றாடலுக்கு பொருந்தக்கூடிய வகையில் குப்பைகளை அழிக்குமாறு மாநகரசபையை வலியுறுத்துவதற்காக இன்னுமொரு வழக்கு நடவடிக்கையை கொண்டு வர விரும்புகிறது.

பரிசாலேசியாவின் சட்டங்களும் சட்ட முறைமைகளும் இலங்கையை ஒத்ததென கருதுக.
பிரஜைகள் தமது வழக்கில் என்ன வாதங்களை முற்போடலாம் என்பதைபற்றி ஆராய்க.

5. “தெற்காசிய வலய நாடுகளின் சுற்றாடல் சட்டமானது நியதிச் சட்டங்களின் ஆக்கத்தை விட நீதிமுறை செயற்பாடுகளின் காரணமாகவே அபிவிருத்தி அடைந்துள்ளது”.

இக் கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா? பொருத்தமான எடுத்துக்காட்டுகளுடன் ஆராய்க.

6. பல்தேசிய கம்பனியொன்று யாழ்ப்பாணத்தின் கரையோரப் பிரதேசம் ஒன்றான கசரினா கடற்கரையில், 125 அறைகளைக் கொண்ட ஹொட்டல் ஒன்றை நிர்மாணிக்க விரும்பியது. இவ் விடயம் தொடர்பாக சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டது. அமைவிடம் உட்பட்ட இத்திட்டத்திற்குரிய மாற்று வழிகளாக வேறு எவ்விடயங்களும் கலந்தாலோசிக்கப் படவில்லை வடமாகாணத்தின் அபிவிருத்தி திட்டத்தின் ஒரு பகுதியாக யாழ்ப்பாணத்தில் உல்லாசப்பிரயாண கைத்தொழிலை முன்னேற்றுவதற்காக இவ் அமைவிடம் தேர்ந்தெடுக்கப்பட்டமை ஒரு காரணம் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருந்தது. மேலும் அப்பிரதேசத்தில் வாழும் மீனவ குடும்பங்களுக்கு வேறு மாற்று இடங்களை ஹொட்டல் தேவைப்படுத்தி இருந்த போதிலும் பாதுகாப்பு காரணங்களால் மக்கள் ஏற்கனவே மீன் பிடி நடவடிக்கையில் இருந்து மட்டுப்படுத்தப்பட்டு இருந்ததன் காரணமாக இந் நடவடிக்கை பாதகமான தாக்கம்மொன்றை ஏற்படுத்தாது என அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டு இருந்தது. எவ்வாறாயினும் மீனவ குடும்பங்கள் இத் திட்டத்தை எதிர்க்கின்றன.

இவ் அறிக்கை பொது மக்கள் கருத்தை பெற்றுக்கொள்ளும் பொருட்டு இரண்டு இடங்களில் பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டது. எவ்வாறாயினும் இராணுவத்தினருக்கும் ஆயுத குழுக்களுக்கும் இடையில் ஏற்பட்ட சில மோதல்களை அடுத்து அந்நாட்களில் பெரும்பாலான மணித்தியாலங்களில் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

இத் திட்டத்தை அக்கறையில் எடுத்துக்கொண்ட கந்தையா பின்வருவன தொடர்பில் உமது ஆலோசனையை நாடுகிறார்.

(அ) அறிக்கையின் பொருளடக்கத்தின் போதுமான தன்மை

(ஆ) சுற்றாடல் தாக்க மதிப்பீடு தொடர்பான நடபடி ரீதியான ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டுள்ளனவா?

7. பல்லின உயிர்தன்மை சமவாயத்தின்(Biological Diversity Convertion)கீழ் தன்னுடைய கடப்பாடுகளுடன் ஒத்து நடப்பதற்கு இலங்கை என்ன சட்ட வழிமுறைகளை எடுத்துள்ளது?

8. இங்கு குறிப்பிடப்பட்ட நாடுகள் அனைத்தும் பொருத்தமான சர்வதேச உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளன என்ற ஊகத்தின் அடிப்படையில் பின்வரும் விடயங்களை ஆராய்க.

(அ) A,B ஆகிய இரண்டு அரசுகளும் ஏறக்குறைய 18 மைல்கள் அகலமுடைய ஒரு சிறு கடற் பரப்பினால் பிரக்கப்பட்டு இருந்த அயல் நாடுகளாகும். A அரசினுடைய சில பிரதேசங்களில் பறவைக் காய்ச்சல் பரவி இருந்தது. காட்டுப் பறவைகளினால் பறவைக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளதாக நம்பினர். ஏனவே A அரசில் இருந்து B அரசுக்கு இடம்பெயர்ந்து வரும் பறவைகளை பிடித்து Bஅரசு கொல்ல வேண்டுமென ஒரு குழு சிபார்சு செய்தது. இதன் மூலம் B அரசின் சுதேச பறவை இனங்களை பாதுகாக்க முடியுமென வாதிடப்பட்டது. இவ் விடயம் தொடர்பில் B அரசுக்கு உள்ள சர்வதேச கடப்பாடுகள் யாவை?

(ஆ) உலகப் பிரசித்திப்பெற்ற ஈர நிலம்மொன்று C அரசினுடைய தலைநகரை அண்மித்தப் பகுதியில் காணப்பட்டது. சர்வதேச அபிவிருத்தி வங்கி, இக் குறிப்பிட்ட ஈர நிலத்திலிருந்து ஆகக்கூடிய நிதிசார் நலன்களை பெற்றுக் கொள்ள அந்நிலம் நிரப்பப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்ற பிரேர்ணையை முன் வைத்தது. தலைநகரை அபிவிருத்தி செய்யும் விடயம் வங்கியினுடைய திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு இருந்தது. இந்த அடிப்படையில் இச் செயல் திட்டத்திற்கு நிதி உதவி செய்ய வங்கி ஒப்புக்கொண்டது. இத் திட்டம் C அரசினுடைய சர்வதேச கடப்பாடுகளுடன் முரண்படுமா?

(பதிப்புரிமையுடையது)

LIBRARY